
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 39
கதிர் : 257
வெள்ளிக்கிழமை
09 ஓகஸ்ட் 2024
ஆடி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"எலக்சன் கேக்கிறவையெல்லாம் நல்லூருக்கு இந்த முறை படையெடுப்பினம் கண்டியளோ"



ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல்

## தமிழ்ப் பொதுவேட்பாளராக அரியநேந்திரன் அறிவிப்பு!

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 9

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொதுவேட்பாளராக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேந்திரன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

11

ஜனாதிபதித் தேர்தலில்

## தமிழரசின் நிலைப்பாடு ஞாயிறன்று அறிவிப்பு?

கொழும்பு, ஓக. 9

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு யாருக்கு? என்பது தொடர்பாகக் கட்சியின் மத்திய செயற்குழு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஒன்றுகூடித் தீர்மானம் எடுத்து அறிவிக்கவுள்ளதாகத் தமிழரசுக் கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் பெரும்பாலான கட்சிகள் தமது ஆதரவு யாருக்கு? என்ற விடயத்தைப் பகிரங்கமாக அறிவித்துவிட்டன.

11

## காலத்தின் தேவைகருதியே தமிழ்ப் பொதுவேட்பாளர்

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வலியுறுத்து!

கொழும்பு, ஓக. 9

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டியது காலத்தின் தேவை. பொருளாதாரப் பிரச்சினைகளில் தமிழரின் உரிமைப் பிரச்சினை

11

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 9

'அலங்காரக் கந்தன்' எனப் போற்றிச் சிறப்பிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில்

11



## வீடுகள் மீது தாக்குதல் மூவர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ்ப்பாணத்தில் வீடுகள் மீது தாக்குதல் நடத்தியமை, தீக்கிரையாக்கியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய மூவர் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

11

## வடக்கு – கிழக்கு மக்களை நிச்சயமாக மீட்டெடுப்பேன்

தேர்தல் கூட்டணியில் சஜித் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 9

வடக்கு - கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து அவர்களை நிச்சயம் மீட்டெடுப்பேன். மக்களை வெற்றியடைய வைக்கும் யுகம் எமது ஆட்சியில் மலரும் என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின்

11

வர்த்தகர் ஷியாம் கொலை;

## சந்தேகநபர்களின் முறையீட்டை நிராகரித்தது உயர்நீதிமன்றம்!

மரண தண்டனையையும் உறுதிப்படுத்தியது

கொழும்பு, ஓக. 9

2013ஆம் ஆண்டு பம்பலப்பிட்டிப் பிரதேசத்தில் வசித்து வந்த கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் ஷியாம் என்பவரைக் கடத்திச் சென்று கொலை செய்த குற்றச்

11

## வடமாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9

வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி காரணமாக, வட மாகாணத்துக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 17 ஆம் திகதிவரை கனமழை கிடைக்க

11

## ஜனாதிபதித் தேர்தலில் பின்வாங்குவார் நாமல்!



கொழும்பு, ஓக. 9

ஜனாதிபதித் தேர்தல் சமரிலிருந்து நாமல் ராஜபக்ச கடைசி நேரத்தில் பின்வாங்கக் கூடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதான கட்சிகளுடன் பேரம் பேசுவதற்காகவே நாமல்

11



## அனைத்து மருத்துவமனைகளிலும் அவசர சிகிச்சைப்பிரிவு அவசியம்!

வடக்கு ஆளுநர் அதிரடி உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 9

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும், அவசர சிகிச்சைப்பிரிவு அமைக்கப்படவேண்டும் என்று வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

வடமாகாணச் சுகாதாரத்துறை தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல்

11

## கடும் காற்றுக்காரணமாக தூக்கியெறியப்பட்ட கூரை

மூன்று குடும்பங்கள் நிர்க்கதி

யாழ்ப்பாணம், ஓக. 9

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம், கல்விளான் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. ம. கூட்டணி உதயம் 8 கட்சிகள் இணைவு



## களைகட்டும் தேர்தல் களம்

**கொழும்பு, ஓக. 9**
**ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் கூட்டணி நேற்று உதயமானதுடன், கூட்டணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.**

இந்தப் புதிய ஐக்கிய மக்கள் கூட்டணியில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 8 கட்சிகள் இணைந்துள்ளன.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள்சபை, சுதந்திரக் கட்சியின் தயாசிறி அணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன கூட்டணியில் இணைந்து, கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவை உறுதிப்படுத்தின. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவும் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளார்.

மேலும் சில கட்சிகளும், சிவில் அமைப்புகளும், தொழிற்சங்கங்களும் கூட்டணியில் இணைந்துள்ளன. அடுத்துவரும் நாள்களில் மேலும் சில அரசியல் பிரமுகர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-44)

# நீதியமைச்சு ஜனாதிபதி வசம்

கொழும்பு, ஓக.9
நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கொண்டு வந்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக விஜயதாஸ ராஜபக்ச அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய நிலையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

# இதுவரை 22 பேர் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், ஓக.9
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இதுவரை 22 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்துதல் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ள நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11.30 மணிவரையான காலப்பகுதியில் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் காலவகாசம் இன்று வெள்ளிக்கிழமை முடிவடையவுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. (ச-இ)

# ரூ.1,700 ஊதியம் ரணில் 'பல்டி'

கொழும்பு, ஓக.9
பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனமாக 1,700 ரூபாவைப் பெற்றுத் தருவதாக தாம் ஒருபோதும் உறுதியளிக்கவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களது வேதனத்தை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளை, தொழில் அமைச்சு, வேதன நிர்ணயசபையின் ஊடாக மேற்கொண்டிருந்தது.

தோட்டத்துறை என்ற பழைமையான விடயத்தை என்னிடம் கூற வேண்டாம். தற்போது விவசாய முறைமையே கடைப்பிடிக்கப்படுகிறது. இலாபமீட்டி தொழிலாளர்களை பராமரிக்க முடியாத நிறுவனங்களிடம் இருந்து தோட்டக் காணிகளை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தோட்டப் பகுதிகளில் உள்ள லயன் அறைகள் அமைந்துள்ள காணிகளைக் கிராமங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# அரசியல் காரணங்களால் ரூ.6.7 பில்லியன் வீணடிப்பு

கொழும்பு, ஓக. 9
அரசியல்வாதிகள் அரசியல் காரணங்களுக்காக பொதுமக்களின் பணத்தை வீணடித்து வருவதாக நாடாளுமன்ற நிலையியல் குழுத் தலைவர் அஜித் மன்னப்பெருமா தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து அல்லது ஆறு வருடங்களில் 34 திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட 6.7 பில்லியன் ரூபா வீணடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதிப்பற்றாக்குறை காரணமாக 23 திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டதாகவும், 11 திட்டங்கள் வேறு காரணங்களுக்காக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் -இவ்வாறு நிறுத்தப்பட்ட திட்டங்களுள் ஹட்டன் புகையிரத நிலைய அபிவிருத்தி திட்டமும் பொலநறுவை மெத்சிறிபாய நிர்வாக கட்டடத் தொகுதித் திட்டமும் அடங்குவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஒ-6)



# எனக்கு எவரும் போட்டியில்லை

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.9
நாட்டை முன்னேற்றுவதில் தான் கவனம் செலுத்துவதால் எனக்கு போட்டி எதுவும் கிடையாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனது திறமையை இரண்டு முறை நிரூபித்துள்ளேன். சர்வதேச நாணயநிதியத்துடன் அல்லது கடன் வழங்குநர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் எந்த அளவுகோலையும் மாற்றமுடியாது.

அவ்வாறு செய்தால் இலங்கை நிதியை இழக்க நேரிடும். எனவே, அனைத்து வேட்பாளர்களும் வாக்காளர்களுக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# அறிவுறுத்தல்கள் அரசு உதாசீனம்?

கொழும்பு, ஓக.9
அனைத்து அரச ஓய்வூதியர்களுக்கும் விசேட இடைக்காலக் கொடுப்பனவை வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை மீளப் பெறுமாறு அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள போதிலும் அந்தக் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தேர்தல் காலத்தில் அரசு செயற்படுத்தி வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நலத்திட்டங்களையும் நிறுத்துமாறு தேர்தல்கள் ஆணையத் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் அறிவித்திருந்தார்.

எனினும் அரச ஊதிய முரண்பாடுகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிசீலணையை தொடர்ந்து இந்த கொடுப்பனவை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ஊடகவியலாளருக்காக ஊடக ஆணைக்குழு!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.9
எதிர்வரும் புதிய நாடாளுமன்றத்தின்கீழ் உள்ளூர் ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு ஊடக ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்து, அவர்களின் சேவை ஒப்பந்தங்கள் தொடர்பில் ஆராய்ந்து அதிகாரம் வழங்குவதற்கு கவனம் செலுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். உள்ளூர் ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அத்துடன் உள்ளூர் ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய பிரேரணையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. (ச-இ)


# மொட்டுக்கட்சி வெற்றி உறுதி



கொழும்பு, ஓக.9
ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி நிச்சயம் வெற்றி பெறும் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஜனாதிபதி வேட்பாளருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ச அறிவிக்கப்பட்ட நிலையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறியுள்ள உறுப்பினர்களை மீண்டும் கட்சிக்கு வருமாறும் நாமல் ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லைக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

மதுரகவி
காரை. எம்.பி. அருளானந்தன்

**கொடியேற்றம்**

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லைக் கந்தனின் குரோதி வருடத்துக்குரிய கொடியேற்றப் பெருவிழா இன்று (09.08.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பக்தி பூர்வமாக ஆரம்பமாகின்றது. தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப் பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக்கும் இடையிலுள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டது எனலாம்.

எமது ஈழமணித் திருநாட்டில் கருணைக் கடலாகிய முருகன் கதிர்காமத்திலும், மாவிட்டபுரத்திலும், செல்வச் சந்நிதியிலும், கரூதவனக் கடவையிலும், மண்டூரிலும், சித்தாண்டியிலும், வெருகலிலும், நல்லையம்பதியிலும், கோயில் கொண்டிருக்கின்றான்.

யாழ்ப்பாணத்தில் கந்தபுராணக் கலாசாரத்தின் மையமாக நல்ல ஊராக, சைவ அனுட்டானங்களுக்கெல்லாம் ஒரு குன்றமாக விளங்குவது நல்லூர் எனலாம்.

**கொடிச்சீலை**

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், நல்லூரிலுள்ள செங்குந்த மரபினரால் சம்பிரதாய பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை நேற்றையதினம் வியாழக்கிழமை (08.08.2024) யாழ்ப்பாணம் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்திலிருந்து காலை கொடிச்சீலை சிறிய தேரில் வைத்து பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்து வரப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

**நல்லூர் கந்தனின் மஹறாற்சவச் சிறப்பு**

கொடியேற்றமானது ஆடி அமாவாசையிலிருந்து ஆறாவது நாள் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து இருபத்தைந்து நாள்கள் மஹோற்சவங்கள் மிக விமர்சையாக காலையிலும், மாலையிலும் இடம் பெறும்.

பத்தாம் நாள் திருமஞ்சத் திருவிழாவும் ,பதினேழாவது திருவிழா கார்த்திகை உற்சவமும், பத்தொன்பதாவது திருவிழா திருக்கைலாச வாகனத் திருவிழாவும், இருபத்திரெண்டாவது திருவிழா தெண்டாயுதபாணி உற்சவமும் (மாம்பழத் திருவிழா) இருபத்தி மூன்றாவது திருவிழா சப்பரத் திருவிழாவும், இருபத்தி நான்காம் நாள் திருவிழா தேர்த்திருவிழாவும், இருபத்தைந்தாம் நாள் திருவிழா தீர்த்தத் திருவிழாவும், இருபத்தாறாவது நாள் பூங்காவனத் திருவிழாவும் விசேடமாக நடைபெறும்.

இந்தத் திருவிழாக்காலங்களில் பூலோக கைலாசமாகவே நல்லூர் கந்தசுவாமி ஆலயம் காட்சியளிக்கும்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் திருவிழா ஆரம்பித்துவிட்டால் அதன் அதிர்ச்சி யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல உலகம் முழுவதிலும் காணப்படுகின்றது.

எந்த மதமும் முருகனே மாயோன் மருகனே! ஒருகை முகன் தம்பியே உன் திருச் சந்நிதியில் வந்து நின்றாலே பெரியார், சிறியார், இளைஞர், முதியவர், கற்றவர், கல்லார், வறியவர், செல்வர், நல்லோர், தீயார், அதிகாரி, அடிமை என்ற பேதம் ஒழிந்து யாவரும் முருகன் அடியார் என்ற உணர்ச்சி ஊற்றெடுக்கத் தம்மை மறந்து காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கித் துதிக்கின்றனர்.

'அவனருளாலே அவன் தாள் வணங்கு ' என்றாற்போல அவன் அருளுக்கு பாத்திரமாகி வந்த வினையும், வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொல்லக் கலங்குமே என்பதை நல்லூரிலே கூடும் அடியவர்கள் நன்கு அறிவார்கள்.

எங்கு பார்த்தாலும் முருகப் பெருமானைப் போற்றும் நினைவு முதிர்ச்சியால் அனைத்திலும் முருகனின் பாடல்களே ஒலிக்கின்றன. அவன் துணைதான் நமக்கு எதனையும் தரவல்லது என்ற ஒரு பெரும் நம்பிக்கையில் நாளும் பெருமானை வழிபட்டு வாழ்கின்றார்கள்.

# நல்லூர்க் கந்தன் கொடிச்சீலை கையளிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 9

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. செங்குந்தர் பரம்பரையினரால் கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது வழக்கமாகும். நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய தேர் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 10 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தை சென்றடைந்தது. அங்கு ஆலய வெளிவீதி உலா சென்று சுபநேரத்தில் பூசைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து கொடிச்சீலை நல்லூர்க் கந்தன் ஆலயப் பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-27,66,17,20)









## ஆணவத்தை அழிக்கவே கொடிபேறு

நல்லூரானுக்குக் கொடியேறினால்
நாட்டில் நல்லது நடக்குமே என்பது
பல்லோருடைய கனவுகளும் கூட
பஞ்சமா பாதகங்களே நாடாகிவிட்டது.

பச்சிளம் பாலகர் கொலை நடக்கிறது
பாலியல் வன்மம் தினந்தினம் நடக்கிறது.
நச்சுடைய போதையில் நாடு மிதக்கிறது.
நாளைய சந்ததி எம்மைத் தூற்றவே போதிக்கிறது.

ஆணவம் எப்போ நாட்டுக்குள் புகுந்ததோ
அன்று நாடும் வீடும் அத்தனையும் நாசம்!
காணாதது எல்லாம் காணத் துடிதுடிக்கின்றார்கள்
காசு பணம் இருந்தால் கடவுளும் கமராவுக்குள் அகப்படுவர்.

என்னாலேயே தான் என்று
சின்னாபின்னமானது நம் நாடு ஆம்!
பொன்னான நாட்டை மண்ணாக்கியே
போதையால் அழித்து விட்டனர் முருகா.

பெரிய பெரிய இடங்களிலே தான் முருகா
பென்னாம் பெரிய ஊழல் நடக்கிறதே
அரிய பெரிய தெய்வங்கள் எல்லாம்
ஆராயாத வழக்கிலிடப்பட்டுள்ளன.

கடமை செய்யாத பலர் நம் நாட்டில்
கடவுளுக்குத் தொண்டாற்றுகின்றனர்
அடிமையாய் மக்களை வைத்திருக்கவே
அத்தனை தலைமைகளும் வாழ்கிறதே.

அடுத்து வரவேண்டியது தலைமைகளே
ஆன்மீகமும் அரசியலும் பெறவில்லையே!
படுத்து விடுமோ யாழ்ப்பாணம் உலகில்
புண்ணிய புண்ணியம் பூக்குமோ முருகா!

கே.எஸ். சிவஞானராஜா

நல்லூர் கந்தன் மஹோற்சவப் பாமாலை
அலங்காரக் கந்தனாய் வந்திடுவான் நல்லை வீதியில்

பல்லோர் போற்றும் நல்லூரான் திருவிழா
பாவங்கள் அழிந்திட பரமன் திருமகன்
பாவையர் பாங்காக வீதி உலா வரும் பெருவிழா
நாலா வீதியும் நம் அடியார் அங்கப்பிரதட்சணை
நால்வர் திருமுறையும் நாளெல்லாம் ஒலித்திடுமே
அழகன் முருகனும் அனுதினம்
அலங்காரக் கந்தனாய் வந்திடுவான் நல்லை வீதியில்

திருமுறைசெவ்வர் பாலசுப்பிரமணியம்
(வேலணைபாலா ஜே.பி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரிச்சந்தை

கொடிகாமம், ஓக.9

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவின் மாதிரிச் சந்தை ஆரம்பப்பிரிவு வளாகத்தில் அதிபர் க.உமாபாலன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பழைய மாணவரும் பொறியியலாளருமான சு.தினேஸ் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் சிறப்பு விருந்தினராகவும், உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் பாடசாலை நிறைவேற்றுக்குழு செயலாளர் திருமதி ராஜராஜிகா முருகானந்தா ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (ரி-159)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற ஊழியர் சங்கம் நடத்தும் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் கந்தசாமி நாகஜெயகுமார் தலைமையில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர்சங்க பொதுஅறையில் நாளை சனிக் கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற அனைவரும் கலந்து கொள்ளலாம் எனவும், தங்களது அங்கத்துவத்தை ரூபா ஆயிரம் செலுத்தி உறுதிப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஓக.9

வட மாகாண வங்கி ஓய்வு நிலை வங்கியாளர் நலன்புரி சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு யாழ்.கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-25)



## நல்லூர் திருவிழாவையொட்டி கூட்டுறவு விற்பனையகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நல்லூர்க் கிளை விற்பனை நிலையம் நேற்றுக்காலை ஆலய வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவர் மு.ஜெ. சுஜீந்திரன் தெரிவித்தார்.

ஆலயத்துக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் அமைந்திருக்கும் இந்த விற்பனை நிலையத்தில் பொருள்களை நியாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. (ச-17)

## நல்லூர்த் திருவிழாவையொட்டி கலை நிகழ்வுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.9

நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மாலை 4 மணியில் இருந்து இரவு 8 மணிவரை சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

முதல் நாள் நிகழ்வு தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலையில் இடம்பெறும்.

பிரதம அதிதியாக யாழ். மாநகர சபை ஆணையாளர் ச. கிருஸ்ணேந்திரன், சிறப்பு அதிதியாக யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறை விரிவுரையாளர் கலாநிதி இ. ஜெயந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நல்லூர் சைவ வித்தியா விருத்திச்சங்க அறநெறிப் பாடசாலை, வண்ணை காமாட்சி அம்பாள் அறநெறிப்பாடசாலை, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். விசேட நிகழ்வாக இணுவையூர் ஸ்ரீவள்ளி வில்லிசைக் குழுவினர் வழங்கும் 'வந்தான் வடிவேலன்' வில்லிசை இடம்பெறவுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர் ய.அ.நிருந்தனன் அறிவித்துள்ளார். (ச-25)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 9

வரணி ஒன்றியங்களின் அமையத்தின் 'வரணி சமூக பொருளாதார ஆய்வு - 2022' நூல் வெளியீடு வரணி ஒன்றியத் தலைவர் வே.உதயகுமார் தலைமையில் வரணி மத்திய கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் திருமதி நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25,159)

## மஹோற்சவம்

முல்லைத்தீவு, ஓக.9

விசுவமடு தொட்டியடி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 9 நாள்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் 20ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலய அறங்காவலர்கள் தெரிவித்துள்ளனர். (ரி)

## பொங்கலும் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஓக.9

கற்சிலைமடு தான்தோன்றி நாகம்மை ஆலய பொங்கலும், புதித்தாக அமைக்கப்பட்ட வசந்த மண்டபத் திறப்பு விழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாக ஆலய பூசகர் க.சிவராசா அறிவித்துள்ளார். (ச-25,500)

## தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஓக.9

நல்லூர் முருகன் உற்சவகாலத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு நல்லூர் துர்க்காதேவிமணி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி செப்ரெம்பர் 4ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளது. (ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும், ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது. தெய்வ வழிபாடு செய்வீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். செலவுகள் ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும். வியாபாரம் எப்போதும்போல் நடைபெறும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு கரையும். நன்மைகள் ஏற்படும். சிவபெருமான் வழிபாடு சிறப்பான பலன்களைத் தரும். விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே இருக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மகிழ்ச்சி நிலவும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். வேங்கடேச பெருமாளை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை எளிதில் முறியடிப் பீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். நரசிம்மரை வழிபட நன்மைகள் கூடுதலாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்களின் போது கவனம் தேவை. தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** பதன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவு செய்ய வேண்டி வரும்.

**விருச்சிகம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் ஏற்படும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் ஏற்படும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்ததைவிடவும் கூடுதலாகக் கிடைக்கும். விநாயகரை வழிபட காரியங்கள் தடையின்றி சாதகமாக முடியும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும். பாதிப்பு எதுவும் இருக்காது. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும். சிரமங்களைத் தவிர்த்துவிடலாம்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆதாயம் கிடைக்கும். பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக் கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொதுவேட்பாளரும் எதிர்ப்புகளும்

2004 ஆம் ஆண்டு, தென்னிலங்கையிலிருந்து ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரும் பங்குபற்றியிருந்தனர். நிகழ்ச்சியின் நெறியாளர், முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரை நோக்கி ஒரு கேள்வியை முன்வைத்தார். 'இவர்களை (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) பாருங்கள். எவ்வளவு ஒற்றுமையாக இருக்கின்றார்கள். அவர்களைப் போல் ஏன் உங்களால் (முஸ்லிம் அரசியல் தரப்புகளால்) ஒற்றுமையாக இருக்கமுடியவில்லை?' என்று கேட்டார். அதற்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கிய பதில், அவர்களின் (கூட்டமைப்பு) பின்னால் துப்பாக்கி இருக்கின்றது. அதனால் ஒற்றுமையாக இருக்கின்றார்கள் என்பதாக இருந்தது.


தமிழ் அரசியல்வாதிகளை உண்மையாகவே ஒற்றுமைப்படுத்தி வைத்திருந்தது அவர்கள் பின்னால் இருந்த துப்பாக்கிதான் என்பதை, அந்தத் துப்பாக்கிகள் ஓய்ந்து போனதன் பின்னரான 15 ஆண்டுகள் உணர்த்தியிருக்கின்றன. இன்று தமிழ் அரசியல்வாதிகள் ஆளுக்கொரு திசையில் பிரிந்து நின்று தமிழினத்தை கூறுபோட்டுக்கொண்டிருக்கின்றார்கள். எந்தவொரு விடயத்திலும் ஒற்றுமைப்படுவதற்கு தமிழ் அரசியல்வாதிகள் தயாரில்லை. தாம் ஒவ்வொருவரும் சொல்வதே சரி என்கின்ற விடாப்பிடி மனநிலையிலிருந்து அவர்கள் வெளிவருவதற்கும் தயாரில்லை. தமிழ் அரசியல் தரப்புகளை ஓரணியாக்க பல தடவைகள் எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் சாண் ஏற முழம் சறுக்கிய கதையாக புதைகுழிக்குள் விழுந்தமைதான் வரலாறாகியிருக்கின்றது.

தன்முயற்சியில் சற்றும் மனம்தளராத விக்கிரமாதித்தன் போல தமிழ் சிவில் அமைப்புகள் சில ஒன்று சேர்ந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கான வியூகத்தை வகுத்தன. தமிழ் அரசியல்வாதிகள் முன்வைத்த தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற கோஷத்தை எப்படி நடைமுறையில் சாத்தியமாக்கலாம் என்பது தொடர்பில் சிந்தித்த அந்த அமைப்புகள் அதற்கு செயல்வடிவம் கொடுத்தன. தமிழ் அரசியல் தரப்புகளையும் அழைத்துக் கொண்டு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி நடைமுறைப்படுத்தவும் செய்துள்ளன.

வழமைபோன்று இந்த முயற்சிக்கு எதிராக தமிழ் அரசியல் தரப்புகள் சில களமிறங்கியிருக்கின்றன. இந்த ஜனாதிபதித் தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்ற எந்த வழிவரைபடமும் இல்லாமல் வெறுமனே ஒற்றுமையைக் குலைக்கும் வகையில், தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம் சரிவராது என்ற ஒற்றைக் கோஷத்துடன் அவர்கள் குரல் எழுப்பத் தொடங்கியிருக்கின்றார்கள். அவர்களின் குரல் தமிழ் மக்கள் நலன் சார்ந்ததா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை.

இன்று இலங்கையின் ஜனாதிபதியாக யார் வரவேண்டும், வரக்கூடாது என்பதைத் தீர்மானிக்கும் சக்திகளாக இலங்கையைச்சுற்றியுள்ள பூகோள வல்லாதிக்க சக்திகளே உள்ளன. அது வெளிப்படையானது. அந்தச் சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்கு வெளியே காரியமாற்றுவது என்பது மலையைத் திரித்து கயிறாக்கும் வேலை. இப்படிப்பட்ட சூழலில், தமிழ்ப் பொதுவேட்பாளர் கோஷம் எந்தவொரு வல்லாதிக்க சக்தியின் நிகழ்ச்சி நிரலுக்கு இடையூறாக இருக்கின்றதோ, அதன் ஏவலாளிகள் இதைக் குழப்புவார்கள். வல்லாதிக்க சக்தியின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பது மாத்திரம்தான் அந்த ஏவலாளிகளின் தேவை.

தமிழ்த் தேசிய அரசியலைப் பேசிக்கொண்டு தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரத்தைக் கெடுக்கும் அந்த ஏவலாளிகளை இந்த ஜனாதிபதித் தேர்தலுடன் தமிழ் மக்கள் அடையாளம் கண்டு கொள்ளட்டும்.




# தேர்தலின் பின்னர் கடன் சலுகை மீளாய்வு

## ஐ.எம்.எப்.குழு வருகை



**கொழும்பு, ஓக.9**

**சர்வதேச நாணயநிதியத்தின் அதிகாரிகள் குழுவொன்று நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன் சலுகையின் மூன்றாவது மீளாய்வுக்காகவே இந்த அதிகாரிகள் குழு நாட்டுக்கு வருகை தரவுள்ளது. கடன் சலுகையின் மூன்றாவது மீளாய்வு ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## மரணதண்டனைக் கைதி எமில் ரஞ்சன் விடுதலை

கொழும்பு, ஓக.9

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் கைதி ஒருவரைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவாவுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையிலிருந்து விடுவித்து உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது. தண்டனைக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட பிரதிவாதி லமாஹேவா மேன்முறையீடு செய்திருந்தார். அதனை ஏற்றுக்கொண்ட ஐவர் அடங்கிய உயர் நீதிமன்ற. நீதியரசர்கள் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளனர். (ச-இ)

## அரிசிக்கு தட்டுப்பாடில்லை

கொழும்பு, ஓக.9

நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என விவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை சிறுபோகத்தின் போது 2 மில்லியன் தொன் நெல் அறுவடை செய்யப்படவுள்ளது.

4 இலட்சத்து 80,000 ஹெக்டயர் வயல் நிலப்பரப்பில் 77 சதவீதம் நாடு நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளது என்றும் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## மக்களுக்காக மக்கள் துறை

கொழும்பு, ஓக.9

அரச மற்றும் தனியார் துறைகளுக்கு மேலதிகமாக மக்கள் துறையொன்று உருவாக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்களை பொருளாதார ரீதியாக உயர்த்துவதற்காக இந்தத் துறை உருவாக்கப்படவுள்ளது. கூட்டுறவு இயக்கத்தை மக்கள் துறையின் இயக்கியாக மாற்றும் வகையில் நாட்டில் சுதந்திரமான வலுவான கூட்டுறவு இயக்கம் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## பிரான்ஸுடன் இணைந்து கடல்சார் ஆராய்ச்சி நிலையம்

கொழும்பு, ஓக. 9

இலங்கையும் பிரான்ஸும் இணைந்து கடல்சார் ஆராய்ச்சி நிலையத்தை சேர். ஜோன். கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கவுள்ளன. இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியாவுடன் இணைந்து கடல்சார் ஆராய்ச்சி நிலையம் கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

## நாளை

10.08.2024

சனிக்கிழமை - ஆடி - 25

சுபநேரம் : 03.04 - 04.34

ராகுகாலம் : 09.04 - 10.34

## நாளொரு நல்வார்த்தை

ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையெனில் அவன் வாழ்வு சிறக்காது.

-ஷாம்பார்ட்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விளையாட்டு விழா

கிளிநொச்சி, ஓக.9

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா கரைச்சிப்பிரதேசசெயலர் த.முகுந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டதில் செயலர் எஸ். முரளிதரன், கௌரவ விருந்தினர்களாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஆர். மோகனதாஸ், மாவட்ட மேசைப்பந்தாட்ட பயிற்றுநர் ச.குமார், கிளிநொச்சி மக்கள் அமைப்பின் சார்பில் விளையாட்டு இணைப்பாளர் கலாதரன் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கண்டாவளை பிரதேச செயலர், மாவட்ட புள்ளிவிவர வியலாளர், உதவி மாவட்டச் செயலர், மாகாண விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விளையாட்டு பயிற்றுநர்கள், விளையாட்டுக்கழகங்களின் அங்கத்தவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25,113)



## சட்டவிரோத மதில் இடித்தழிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9

கரவெட்டிப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கரணவாய் வடக்கு மற்றும் நெல்லியடி நகரப் பகுதிகளில் இருவேறு காணி உரிமையாளர்களால் பிரதேச சபையின் உரிய அனுமதியின்றி தொடர்ச்சியாகக் கட்டப்பட்டு வந்த மதில்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடித்தழிக்கப்பட்டுள்ளன.

கரவெட்டிப் பிரதேசசபையின் செயலாளர் கணேசன் கம்சனாதன் தலைமையில் கரவெட்டிப் பிரதேச சபையின் துறைசார் உத்தியோகத்தர்களும், நெல்லியடிப் பொலிஸாரும் இந்த நடவடிக்கையின் போது நேரடியாகப் பிரசன்னமாகியிருந்தனர். கரவெட்டிப் பிரதேசசபையால் கடந்த ஒரு வருடமாக நேரடியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் பல்வேறு கடிதங்களும் அனுப்பிவைக்கப்பட்டு வந்த நிலையில் அதனையும் மீறி மதில்கள் தொடர்ச்சியாகக் கட்டப்பட்டு வந்த காரணத்தால் இடித்தழிக்கப்பட்டதாக பிரதேசசபையினர் தெரிவித்துள்ளனர். (ஓ-66)




## பரந்தன் ம.வி. மாணவன் தொழில்நுட்பத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஓக.9

ஆல் ஐரி கப் (arl IT Hub) நிறுவனத்தால் நடத்தப்பட்ட யாழ். ஜீக் சேலஞ்ச் (சீசன்-3) போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் ஆக்கங்கள் அண்மையில் காட்சிப்படுத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதன்போது கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலய தொழில்நுட்பப் பிரிவு மாணவன் பா.பௌசிகன் 'ஸ்மார்ட் ஹெல்மட்' ஐ தயாரித்து முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். (ச-25)



தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் பயிற்சி நெறியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் உதவி மாவட்டச் செயலர், முறைசாராப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், வளவாளர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (ச-25-9)



சுதுமலைஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய ஆடிப்பூர இலட்சார்ச்சனைப் பெருவிழாவில் சைவமும் வாழ்வும் எனும் விடயப்பொருளில் தொடர் சொற்பொழிவாற்றியமைக்காக பண்டிதர் செஞ்சொல் வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் ஆலய தர்மகர்த்தா சபையால் கௌரவிக்கப்பட்டார். (ரி)




யாழ்.பொது நூலகத்தினரும், யாழ்.பல்கலைக்கழக நாடகமும்அரங்கியலும் துறையினரும் இணைந்து, நடமாடும் நூலக சேவை மற்றும் அரங்கியல் செயற்பாடுகள் என்பவற்றை ஊரெழு கணேச வித்தியாசாலையில் கடந்த புதன்கிழமை நிகழ்த்தினர். (ச-25)



## கொக்குவில் இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக.9

வடமாகாணமட்ட கரம் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி 20 வயதுப் பெண்கள் அணியினர் சம்பியன் பெற்றும், 20 வயது ஆண்கள் பிரிவினர் இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகினர். (ரி-555)

## பரசூட் முறையில் பயிரிடப்பட்ட நெற்செய்கை அறுவடை!

கிளிநொச்சி, ஓக.9

கிளிநொச்சி, அக்கராயன்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவில் அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கையில் நவீன பரசூட் முறையில் செய்கை பண்ணப்பட்ட விவசாயி ஒருவரின் வயலில் நெல் அறுவடை செய்யும் நிகழ்வு அக்கராயன்குளம் பாடவிதான உத்தியோகத்தர் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர், பணிமனை பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25-113)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிக் கிராமங்களுக்கும் வயநாட்டின் நிலையே ஏற்படும்

## சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஓக.9**

**கேரள மாநிலத்திலுள்ள வயநாடு கிராமம் அழிவடைந்ததைப் போன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொன்னாவெளி, கௌதாரிமுனைக் கிராமமும் அழிவடைந்து, இலங்கையின் வரைபடத்தில் இருந்து இல்லாமற்போகும் அபாயம் ஏற்படும். இந்தப் பேரழிவைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.**

-இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் கேரள மாநிலத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்ந்த வயநாடு தற்போது காணாமற்போயுள்ளது. இயற்கைப் பேரழிவுக்கு முன்னால் மனிதன் மண்டியிட்டுக் கிடக்கின்றான்.

கிளிநொச்சி, பூநகரி – பொன்னாவெளியில் உள்ள முருங்கைக் கற்களைத் தோண்டியெடுக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. முருங்கைக் கற்களை பாதுகாப்பதற்காக அங்குள்ள மக்கள் போராடுகின்றனர்.

கௌதாரிமுனையில் மண் மேடுகளை அள்ள வேண்டாம் என மக்கள் போராடி வருகின்றனர். இந்த இரண்டு கிராமங்களையும் காப்பாற்ற வேண்டும். இங்கேயும் ஒரு வயநாடு உருவாகி விடக்கூடாது - என்றார். (ச-இ)

# துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி!

கொழும்பு, ஓக.9

சீதுவப் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மோட்டார் வாகனம் ஒன்றைச் சோதனையிட்ட போது இந்தச் சம்பவம்இடம்பெற்றுள்ளது. வாகனமொன்றை சோதனையிட்ட போது வாகனத்தின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தவர், பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கியை பறிக்க முயற்சித்துள்ளார்.

இதன்போது துப்பாக்கி இயங்கியதில் வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# பங்களாதேஷில் முதலீடு அச்சம் தேவையில்லை

கொழும்பு, ஓக.9

பங்களாதேஷில் முதலீடு செய்துள்ள இலங்கையர்களை அச்சமடைய வேண்டாமெனவும் பங்களாதேஷிலேயே தங்கியிருக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை நீடிக்கமாட்டாது. பங்களாதேஷ் விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். 2022 ஆம் ஆண்டு இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா இலங்கைக்கு 200 மில்லியன் டொலர் கடனுதவி வழங்கியதையும் நினைவு கூர்ந்த ஜனாதிபதி பங்களாதேஷ் ஒரு நல்ல நாடு எனவும் தெரிவித்துள்ளார். (ச-25,6)

# கையிருப்பு வீழ்ச்சி

இலங்கை மத்தியவங்கியின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு சொத்துகளின் அளவில் இந்த ஆண்டின் ஜூலை மாதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அண்மைய தரவு அறிக்கைகளின்படி இந்த விடயம் தெரியவந்துள்ளது. ஜூன் மாதம் 5,654 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவான உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகளின் மதிப்பு ஜூலை மாதம் 0.1% குறைந்து 5,649 மில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது. (ச-இ)

# கட்டுநாயக்கவில் ஐஸ் போதை மீட்பு

## பெறுமதி ரூ. 5 கோடி

கொழும்பு, ஓக.9

கணினி சாதனங்களில் மறைத்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 5 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கட்டுநாயக்க கொள்கலன் முனையகம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பு 5 கோடி ரூபா என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவை தற்போது துபாயில் தங்கியுள்ள பிரபல கடத்தல்காரன் நிபுணவினால் அனுப்பப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. (ச-6)

# ஆயுள்வேத வைத்தியர்களுக்கும் மேலதிக சேவைக்கொடுப்பனவு

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக. 9

இதுவரை மேலைத்தேய மருத்துவர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டு வந்த மேலதிக சேவைக் கொடுப்பனவை, அரச ஆயுள்வேத வைத்தியர்களுக்கும் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

18 வருடங்களுக்கும் மேலாக ஆயுள்வேத வைத்தியர்கள் பல சந்தர்ப்பங்களில் இந்தக் கோரிக்கையை முன்வைத்து வந்தனர். அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அனுமதியளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் - என்றார். (ஒ-6)

# தினம் தெரியுமோ?

**இப்ப கலிகாலம் முத்திப் போச்செண்டது உண்மை தான். எங்க பார்த்தாலும் ஒரே கொள்ளையும், கொலையுமாத்தான் கிடக்குது. அதில இப்ப அளவெட்டியில ஒண்டரை மாதக் குழந்தையை பெத்த தாயே சாக்கொண்டதுதான் ஆகப்பெரிய கொடூரம். அந்த ஒண்டரை மாதக் குழந்தையில தாய்க்கு அப்பிடி என்ன ஆத்திரம் எண்டதுதான் கனபேரின்ர கேள்வி. அந்தக் குழந்தையைக் கொலை செய்யிற அளவுக்கு எந்தவொரு காரணமும் தாய்க்கு இல்லை. அப்ப ஏன் கொலை செய்தவா? ஏனெண்டால் சில பொம்பிளையளுக்கு பிள்ளை பிறந்தால், மனநிலையில ஒரு மாற்றம் வரப்பாக்கும். கூடுதலாக் கோபப்படுறது, தனிய இருக்கிறது; தனியக் கதைக்கிறது எண்டு சின்னச் சின்ன மாற்றம் வந்து, காலப்போக்கில சரியாகிடும். அப்பிடி ஒரு மனநிலை மாற்றம் இந்தக் குழந்தையின்ர தாய்க்கும் வந்ததாலதான் இப்பிடி அப்பாவிக்குழந்தை அநியாயமாச் செத்திருக்குது.**

**அந்தக் குழந்தையைப் பெத்த தாய்க்கு இது ரண்டாவது பிள்ளை. முதல் பிள்ளை நல்லாத்தான் இருக்கு. அதை நல்லபடியாத்தான் வளர்த்துமிருக்கிறா. ஆனால் இந்தப் பிள்ளையைப் பெத்தபிறகுதான் அவான்ர மனநிலையில மாற்றம் வந்திருக்குது. அந்தக் குழந்தை பால் குடிக்கேலை எண்டதுக்காக ரண்டு காலையும் முறிச்சிருக்கிறா. ஆனால் ஆருக்கும் அது தெரியாது. பிள்ளை அடிக்கடி வீரிட்டு அழுது ஆரும் என்னெண்டு கேட்டால் 'அது பசியில அழுகுது' எண்டு தாய்க்காரி சொல்லியிருக்கிறா. அதோட குழந்தையின்ர கால் எலும்பு முறிஞ்சதால, அந்தப் பிள்ளையை ஆரும் ஆசையாத் தூக்கினாலும், அது வலி தாங்காமல் பெரிசாக் கத்தி அழுதிருக்கு. ஆனால் ஒருத்தருக்கும் குழந்தை கால்முறிஞ்ச நோவில அழுகுது எண்டு அப்ப தெரியேலை. ஏதோ வருத்தமாக்கும் எண்டுதான் நினைச்சிருக்கினம். காலை முறிச்சதோட அந்தத் தாய் விடேலை. பிள்ளையின்ர காதுக்கையும் கம்பிஇல்லாட்டி தடி எதாலையோ குத்தியிருக்கிறா. போஸ்ட்மோட்டம் செய்யேக்கதான் பிள்ளை யின்ர காதுக்குள்ள காயம் இருந்ததைக் கண்டுபிடிச்சிருக்கினம். இவ்வளவு சித்திரவதையும் பத்தாதெண்டு, கடைசியா அந்த ஒண்டரை மாதப் பிஞ்சுக் குழந்தையை சுவரோட தூக்கி அதின்ர தலையை மோதி இருக்கிறா. அதுக்குப் பிறகும் எப்பிடி அந்தக் குழந்தை உயிரோட இருக்கும்?**

**முதல் குழந்தையை நல்லா வளர்த்த தாய்க்கு இப்பிடி இரண்டாவது பிள்ளை பிறக்கேக்க மனநிலை மாறும் எண்டு ஒருத்தரும் பெரிசா எதிர்பாக்கேலை. எண்டாலும் இந்தக் கொலைக்கு தனிய அந்தத் தாயை மட்டும் குற்றம் சாட்ட ஏலாது. வீட்டில இருந்தவையும் கொஞ்சம் அவதானமாக இருந்திருக்கலாம். குழந்தையைக் கொலை செய்யிற அளவுக்கு மாற்றம் வந்திருக்கெண்டால், கொஞ்சமெண்டாலும் அவான்ர நடத்தையில கண்டுபிடிச்சிருக்கலாம். ஆனால் ஆரும் அதையும் கவனிக்கேலை, இல்லாட்டி கவனிச்சும் வெளியில சொல்லேலை. வீட்டுக்காரர் கவனிக்காட்டியும், அந்த ஏரியாவுக்குப் பொறுப்பான 'மிட் வைஃப்' (சுகாதார மருத்துவமாது) இதைக் கண்டுபிடிச்சிருக்கோணும். மருத்துவமாது குழந்தையள் பிறந்த வீடுகளுக்கு ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் போய், குழந்தையையும் தாயையும் அவதானிச்சு அறிக்கை போட வேண்டியது கட்டாயம். அப்பிடி போய் பார்த்திருந்தால், இப்பிடி தாயின்ர மனநிலை மாறினதைக் கண்டுபிடிச்சு, குழந்தையையும் காப்பாத்தி இருக்கலாம். இப்பிடி எல்லாரும் மெத்தனமா இருந்து குழந்தையையும் சாகக் குடுத்து, கடைசியா அந்தப் பழிமுழுக்க தாயிலை போட்டிட்டினம். இப்ப சொல்லுங்கோ கலி முத்திப்போச்சோ இல்லையோ?**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகத் திருவிழா யாழ்.நகரில் இன்று

யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் புத்தகத் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரையான மூன்று தினங்கள் முற்பகல்10 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதன்போது உள்ளூர், வெளியூர் எழுத்தாளர்களின் பல்வேறு துறைசார்ந்த நூல்களை உள்ளடக்கிய 40 காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு விசேட விலைக்கழிவுகளுடன் கூடியதாக நூல்களின் விற்பனையும் இடம்பெறும்.

புத்தகத் திருவிழாவைப் பார்வையிடுவ தற்கான அனுமதி இலவசம் என்றும் புத்தகத் திருவிழா இடம்பெறும் தினங்களில் நூல் வெளியீடுகள், அறிமுக நிகழ்வுகள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-66)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக. 9

கணபதிப்பிள்ளை கணேசலிங்கத்தின் 'மௌனச்சிறை' மற்றும் இருள் கவ்விய பொழுதுகள் ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு மெதடிஸ்த தேவாலயம் ஆழ்வாப்பிள்ளை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-25)


## மைதானப் பராமரிப்பாளருக்கான விண்ணப்பம் கோரல்

உடல் ஆரோக்கியம் உள்ள 25 முதல் 40 வயதிற்கு இடைப்பட்ட ஆண்களிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

ஆர்வம் உடையோர் சுயவிபரங்கள். நற்சான்றிதழ்களுடன் தங்கள் விண்ணப்பங்களை 15.08.2024 ஆம் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிட்ட முவரிக்கு நேரடியாகவோ. தபால் மூலமோ சேர்ப்பிக்கவும். வேலை விபரம். சம்பளம் என்பன நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.


அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
யாழ்ப்பாணம்.
08.08.2024

(CR/43094) J-1

'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ'

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் விவேகானந்தன் (ஆனந்தன்)



அன்னை மடியில் 18.07.1952
ஆண்டவன் அடியில் 08.08.2024

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் விவேகானந்தன் நேற்று (08.08.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ஜெயலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், தயாலலட்சுமி, நர்மதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கேசவன் அவர்களின் அன்பு மாமனாரும், பபினேஷ் இன் அன்பு பேரனும், அமரர் மாணிக்கவாசகர், கருணாநிதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்னலட்சுமி (ஜேர்மன்), அமரர் லங்காதேவி, தனலட்சுமி (கனடா), சத்தியமூர்த்தி (கனடா), ஜெயலட்சுமி, கிருஸ்ணமூர்த்தி, தெட்சணாமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 834 0254

(CS/1098) J-1

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலைஅதிபரும்,
நீர்வேலி பாலர் பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் தலைவர் ஆகிய

### வேலுப்பிள்ளை குணசீலன்

அவர்கள் 30.07.2024 இல் யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிவான் டி.எஸ். சூசைதாசன் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகத்தினர்
பாலர் பகல் விடுதியும்,
முன்பள்ளியும், நீர்வேலி.

(CS/55890) J-1

## பனங்காமம் பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் வ.து

பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், முல்லைத்தீவு மாவட்டம்
பதிவு இலக்கம் :-Regd No.M-135 of 1-2-1971

### நவீன அரிசியாலையை குத்தகை அடிப்படையில் வழங்கல்

எமது சங்கத்திற்கு சொந்தமான பொன்னகர் துணுக்காய் பகுதியில் அமைந்துள்ள அரிசியாலை தொழிற்சாலையும் அதனுடன் இணைந்த ஒரு நெல்களஞ்சிய கட்டடம் ஆகிய சொத்துக்களை மூன்று வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் நிபந்தனைகள் அடிப்படையின் கீழ் தகுதியான ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. குத்தகை முற்பணமாக ஆகக்குறைந்த தொகையாக ரூபா பதினைந்து இலட்சம் (ரூபா 1.5மில்லியன்) எதிர்பார்க்கப்படுகின்றது.
2. மாதக்குத்தகை பணமாக ஆகக்குறைந்தது ரூபா ஒருலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 150000.00) எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் 10 திகதிக்கு முன்னதாக பனங்காமம் பற்று பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு மாதாந்த குத்தகைப்பணம் செலுத்தப்படல் வேண்டும்.
3. குத்தகைக்கு கொள்பவர் வேறு நபர்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ உப ஒப்பந்தம் மூலமோ அல்லது வேறு வகையிலோ கைமாற்றமுடியாது.
4. குத்தகை ஒப்பந்தம் மற்றும் முடிவுறுத்தல் தொடர்பிலும் அரிசியாலை தொழிற்சாலை தொடர்பான திருத்தம் பராமரிப்பு ஏனையவிடயங்கள் தொடர்பிலும் தெளிவான எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்று இரு தரப்பாலும் கைச்சாத்திடப்படும்.
5. அரிசியாலையை வாடகைக்கு பெற்றுக்கொள்பவர் சங்கத்தின் அனுமதியின்றி காணி கட்டடத்தில் மேலதிக வேலைத்திட்டங்களாக நிரந்தர இணைப்புக்கள் எதனையும் செய்யமுடியாது எனவும் அவ்வாறு செய்யின் சங்கத்தின் எழுத்து மூல அனுமதியுடன் மட்டுமே செய்ய வேண்டும்.
6. அரிசியாலையை வாடகைக்கு பெற்றுக்கொள்பவர் அங்குள்ள தளபாடங்கள் உபகரணங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் என்பவற்றை பொறுப்பேற்கும்போது பட்டியலிட்டு பெற்றுக்கொள்வதுடன் ஒப்பந்த காலம் முடிவடைந்தாலும் அதே பொருட்களை இயங்கும் நிலையில் மீளகையளிப்பதை உறுதிப்படுதல் வேண்டும்.
7. ஒப்பந்த காலத்தில் அரிசியாலை வளாகத்தில் சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக்கூடிய செயற்பாடுகள் அல்லது சமூகவிரோத செயற்பாடுகள் இல்லாத வகையில் செயற்படுத்தப்படவேண்டும்.
8. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் அங்கத்துவ பணியாளர்களின் பொருளாதார நலவுருத்துக்கள் பாதிக்கப்படாத வகையிலும் கிடைக்கப்பெறுவதை உயர்வான மட்டத்தில் பேணப்படுவதையும் உறுதிப்படுத்தல்வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி தங்களின் தெளிவான இயலுமையை பூரணமாக வெளிப்படுத்தி எதிர்வரும் 23.08.2024 திகதி மதியம் 12.00மணிக்கு முன்னர் எனக்கு கிடைக்கக் கூடியதாக கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு விண்ணப்பத்தினை பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்

மேற்படி விடயம் தொடர்பில் பனங்காமம் பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் இயக்குநர் சபையின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும்.

குறிப்பு

1. குறித்த தொழிற்சாலையை நேரடியாக சென்று பார்வையிட விரும்பின் தலைவர் அல்லது பொது முகாமையாளருடன் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.
2. வருடம் தோறும் இரு தரப்பினர் சம்மதத்துடன் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படலாம்.

தலைவர்
பனங்காமம் பற்று பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்
பாண்டியன்குளம் ம.வி அருகாமை
பாண்டியன்குளம்
நட்டாங்கண்டல், முல்லைத்தீவு மாவட்டம்.

(CS/1097) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 04 . 1942



மறைவு 07 . 08 . 2024

### ஜெயமணி கணபதிப்பிள்ளை

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயமணி கணபதிப்பிள்ளை கடந்த 07.08. 2024 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (நடராசா) அவர்களின் அன்பு மனைவியும், சாந்தினி (கனடா), குமுதினி (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), றோகினி (லோஜி), பிறேம்குமார் (வவுனியா), பிறேம்னி (வ/மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபாகரன் (கனடா), கேசவன், இந்திரகுமார், யோகேஸ்வரி, சிவேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், கிருஷாந், கிஷோர், றிஷி, சாய்கிருஷ்ணா, கோபிகிருஷ்ணா, ஹறிக்கிருஷ்ணா, ஜானுதி, சரத்குமார், மதுரா, சஜீவன், பிரியதர்சன், அனந்தராம், அபிஷ்ராம், நவின்சிகா ஆகியோரின் பேர்த்தியும், அனந்திகா, ஜக்ஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் AJAX CREMATORIUM AND VISITATION CENTRE இல் 10.08.2024 சனிக்கிழமை மு.ப. 11.00 - பி.ப 3.00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, 11.08.2024 ஞாயிற்றுக் கிழமை பி.ப. 01.00 - பி.ப 3.00 (கனடா நேரம்) வரை இறுதிக் கிரியைகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P 077 9476 502

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 55600) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் பிரச்சினையூடாக மூக்கை நுழைக்கிறது சீனா!

## இடமளிக்கக்கூடாதென செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓக.9**
**இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினையை பயன்படுத்தி வடக்கு மீனவர்களை தன்வசப்படுத்துவதற்கு சீன பல யுக்திகளைக் கையாண்டுவருகின்றது. இந்த நடவடிக்கைக்கு நாம் கடுமையான எதிர்ப்பை வெளியிடவேண்டும்.**

-இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளால் எமது மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதும் நூற்றுக்கணக்கான ரோலர் படகுகள் வருகின்றன. மீனவர் பிரச்சினை சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.
மீனவர் பிரச்சினையை அடிப்படையாக வைத்து எமது மீனவர்களை தன் வசப்படுத்துவதற்கு சீனா பல்வேறு யுக்திகளை கையாண்டுவருகின்றது.
தற்போது சீன இராணுவம் வரவுள்ளதுஎன்றும் தெரிவிக்கப்படுகிறது. சீனாவின் இந்த தன்வசப்படுத்தும் முயற்சிக்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது - என்றார். (ச-44)



# திடீர் மழையால் அறுவடை பாதிப்பு

## கிளிநொச்சி, முல்லைத்தீவு விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஓக.9
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போது சிறுபோக நெற்செய்கை அறுவடை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிலையில் திடீரென பெய்த மழை காரணமாக அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
நெல்லை உலர விடுவதிலும், வயல் நிலங்களில் இருந்து வீடுகளுக்கு நெல்மூடைகளை கொண்டு வருவதிலும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர். (ச-25,13,113)

# மறைத்துக் கடத்திய மரக்குற்றிகள் மீட்பு



யாழ்ப்பாணம், ஓக. 9
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆசைப்பிள்ளைஏற்றத்தில் சட்டவிரோதமான முறையில் சூட்சுமமாக மறைத்து கடத்திச் செல்லப்பட்ட மரக்குற்றிகளுடன் டிப்பர் வாகனத்தை கொடிகாமம் பொலிஸார் நேற்றுக்காலை கைப்பற்றியுள்ளதுடன் இருவரை கைது செய்துள்ளனர்.
கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
டிப்பர் வாகனத்தினுள் மரக்குற்றிகள் அடுக்கப்பட்டு அதற்கு மேல் சிறிய கற்கள் ஏற்றப்பட்டு சூட்சுமமான முறையில் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான 24 தேக்க மரக்குற்றிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.
சாரதி உட்பட இருவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவர்களை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-20,27,159,100)



# கவனவீர்ப்புப் பேரணி

யாழ்ப்பாணம், ஓக.9
வடமராட்சி கிழக்கு, தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் மாணவர்களால் பொலித்தீன்பாவனைக்கு எதிரான கவனவீர்ப்புப் பேரணி நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்டது. பேரணியைத் தொடர்ந்து பாடசாலை பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள பொலித்தீன் மற்றும் உக்காத கழிவுப்பொருட்கள்மாணவர்களால் அகற்றப்பட்டன. பேரணியில் வடமராட்சி கிழக்கு பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நிருபன் கலந்து கொண்டார். (ரி-27)

# விட்டுச்செல்லும் பேருந்துகள்!

## நெருக்கடியில் மாணவர்கள்

முல்லைத்தீவு, ஓக. 9
மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு நீண்ட தூரங்களிலிருந்து வரும் மாணவர்களை பேருந்துகள் ஏற்றாது விட்டுச் செல்வதால் நெருக்கடிகளை சந்திக்க நேரிடுகிறது என்று பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். திருமுறிகண்டி, பனிக்கங்குளம், வன்னிவிளாங்குளம், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, அம்பகாமம், மன்னகுளம் போன்ற பல கிராமங்களில் இருந்து பெருமளவு மாணவர்கள் மாங்குளம் பாடசாலைக்கு வந்து செல்கின்றனர்.
பேருந்துகள் மாணவர்களை ஏற்றாது செல்வதால் பாடசாலைக்குச் செல்வதில் மாணவர்கள் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.
எனவே இ.போ.ச. பேருந்துகள் தரித்து நின்று மாணவர்களை ஏற்றிச்செல்ல அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் பெற்றோர் கோரிக்கை விடுத்தனர். (ச-ரி-13)

# குறுநாடக விழா

வவுனியா, ஓக.9
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மூன்றாம் வருட நடன நாடகத்துறை மாணவர்களின் குறுநாடக விழா நிகழ்வுகள் வவுனியா விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் இன்று முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 5.30 மணிக்கு இடம்பெறும்.
குறித்த நாடக ஆற்றுகையானது இராஜமனோகரன் தனுஷாவின் எழுத்துரு மற்றும் நெறியாள்கையில், கலாநிதி. அ. விமலராஜ் இன் இணைப்பாக்கத்தில் க.தணிகாசலத்தின் 'பிரம்படி' எனும் சிறுகதையின் தழுவலாக்கத்தில் வெளிவந்த 'விதைப்புணம்' எனும் தலைப்பில் இடம்பெறவுள்ளது. (ச-25, 110)



# வவு.வில் 4,834.45 ஹெக்ரேயரில் சிறுபோகம்

வவுனியா மாவட்டத்தில் இம்முறை 9 கமநல சேவை நிலையங்களின் கீழாக 6 ஆயிரத்து 327.96 ஹெக்ரேயரில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. அதில் 4 ஆயிரத்து 834.45 ஹெக்ரேயரில் நெல் அறுவடை முடிவடைந்துள்ளது. இந்த அறுவடையிலிருந்து 17 ஆயிரத்து 776.88 மெற்றிக்தொன் நெல் கிடைத்துள்ளதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்தார். (ச-25,110)

# விமோசனமின்றியுள்ள அராலி குமுக்கன் வீதி

## சீரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஓக. 9
வலி.மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட அராலி மத்தி குமுக்கன் வீதி 30 ஆண்டுகளுக்கு மேலாக சீரமைப்பின்றி காணப்படுகிறது. இதனால் மழை காலங்களில் வெள்ளநீர் தேங்குவதால் பயணிக்கமுடியாத நிலை ஏற்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். 2018 ஆம் ஆண்டு வடமாகாணசபையின் முதலமைச்சர் நிதியில் 175 மீற்றர் தூரம் வரையே வீதி சீர் செய்யப்பட்டது. மிகுதிப் பகுதி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.
எனவே உரிய அதிகாரிகள் அராலி மத்தி மக்களின் போக்குவரத்தை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இணுவில் குப்பைமேட்டில் தீப்பரவல்

யாழ்ப்பாணம், ஓக. 9
இணுவில் காரைக்காலில் அமைந்துள்ள நல்லூர்ப் பிரதேச சபையின் திண்மக் கழிவு அகற்றும் நிலையக் குப்பை மேட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் திடீர் தீப் பரவல் ஏற்பட்டது.
உக்கக்கூடிய, உக்கமுடியாத பிளாஸ்ரிக், பொலித்தீன்கள் என அனைத்து வகையான குப்பைகளும் திண்மக்கழிவு அகற்றும் நிலையத்தில் மலை போலக் குவிந்து கிடந்த நிலையிலேயே திடீர் தீப் பரவல் ஏற்பட்டுள்ளது. தீ விபத்துக்கான சரியான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.
யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினரும், நல்லூர் பிரதேசசபையின் பவுஸர் மூலம் பிரதேசசபை ஊழியர்களும் நான்கு மணிநேரமாகத் தீயைக் கட்டுப்படுத்துவதற்காக போராடி, கொளுந்து விட்டெரிந்த தீயை ஒருவாறு கட்டுக்குள் கொண்டு வந்தனர்.
மேற்படி திண்மக் கழிவு அகற்றும் நிலையக் குப்பை மேட்டில் கடந்த மே மாதம் 6ஆம் திகதி இரவு திடீர் தீப் பரவல் ஏற்பட்டிருந்தது. தீயை நீண்ட நேரமாகப் போராடி மறுநாள் அதிகாலையிலேயே கட்டுக்குள் கொண்டுவர முடிந்திருந்தது.
இதனையடுத்து நல்லூர்ப் பிரதேசசபையின் திண்மக் கழிவு அகற்றும் நிலையத்தால் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்புக்கு எதிராகவும், அதனைச் சூழவுள்ள கிராம மக்கள் எதிர்கொண்டுள்ள சுகாதார ரீதியான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டியும் கிராம இளைஞர்களின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.
சில நாள்களின் பின்னர் அங்கு சென்ற கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கு விரைவில் தீர்வுபெற்றுத் தரப்படுமென அப்பகுதி மக்களுக்கு உறுதியளித்திருந்த போதிலும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ஓ-66)

## மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

52 அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு இப்போதும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றில் உரையாயற்று கையில் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு 250 வகையான மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-6)

## கிராம அலுவலர்கள் போர்க்கொடி

கொழும்பு, ஓக.9
தன்னிச்சையான கிராம உத்தியோகத்தர் சேவை யாப்பு வர்த்தமானிக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக கிராம சேவகர்கள் தொழிற்சங்க கூட்டணி அறிவித்துள்ளது.
எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமையிலிருந்து தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சுதந்திர கிராம சேவை உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.கே.ஜி.ஜகத் சந்திரலால் தெரிவித்துள்ளார். தமது தொழில்சார் நடவடிக்கையால் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
27 . 03 . 1995



விண்ணில்
21 . 08 . 2023

**காயத்திரி கதிர்காமநாதன்**
**திதி : கருடபஞ்சமி**

எங்கள் குடும்பத்தில் நிழல் போல் இருந்தவள்
நீ கண்ணிமைக்கும் நேரத்தில் கண்ணீர் துளியாகினாய்
நீ வாழ்ந்த வீடு நீ இன்றி நிலை குலைந்து நிற்கின்றதே!
நம்முற்றத்துப் பூச்செடிகள் உன்வாசம் வீச மறுக்கின்றதே!
உன் வருகைக்காய் வாசல் கதவு தினம் கனாக் காண்கின்றதே!
அத்தனையும் துறந்து பிரபஞ்சத்தோடு ஒன்றிணைந்தாயோ!
என்றும் உன் நினைவுகளுடன்

வைரவர் லேன்,
சிறுப்பிட்டி.
(CS/55893) J-1
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08 . 02 . 1993



உதிர்வு
21 . 08 . 2023

**அமரர் சசிதரன் மிதுன்ராஜ்**
ராசி கலெக்ஷன்ஸ் (Managing Director)



சிந்தையிலே குடியிருக்கும்
செல்வத் திருமகனே!
சொந்தங்கள் எமைவிட்டு
தொலைதூரம் போனதெங்கே

ஆசைச்செல்வமே! அன்பு மலரே!
பாசம்மாறாத நேசத்தாமரையே!
கைகள் கூப்புகிறோம் !
கண்மலர்கள் தூவுகிறோம்!

சசிதரன் குடும்பத்தினர்.
(CS 1101) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 01 . 1934



மறைவு
08 . 08 . 2024

**அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை இராஜேந்திரம்**

(இளைப்பாறிய அதிபர் வயாவிளான் றோ.க.த.பாடசாலை)

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி மேற்கு சிற்றம்பலபுரத்தை வதிவிடமாகவும் கொண்டவருமான அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை இராஜேந்திரம் அவர்கள் நேற்று (08.08.2024) வியாழக்கிழமை இறையடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - றோசம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், இராசையா-அலக்கொக்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பிலோமினா (ஞானம்) வின் பாசமிகு கணவரும், றெஜினோல்ட் (ஜேர்மனி), றுஜியந்தி (கனடா), றொசற்மெலானி (மக்கள் வங்கி முகாமையாளர், பிராந்தியத் தலைமையகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகௌரி (கனடா), யூலியன் (கனடா), தவநாயகம் (ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், றுபீட்சா, றொட்வின், ஜெனிபர், ஜெனற், நிவாசனா, நிதுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.08.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்று, புதவுடல் சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 056 9619
(CS 1083) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின்...

கரைந்து போகக்கூடிய அபாயநிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஊடாக தமிழர் தம் திரட்சியை மீளவும் காண்பிக்க வேண்டிய தேவை உள்ளது என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு நேற்று வியாழக்கிழமை மாலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா. அரியநேந்திரன் அப்பழுக்கற்ற தமிழ்த் தேசியவாதி. தமிழ்த்தேசிய ஆயுதப் போராட்டத் தலைமைத்துவத்தின் ஆசீர்வாதத்துடன் மக்கள் பிரதிநிதியாக 2004ஆம் ஆண்டில் நாடாளுமன்றம் புகுந்தவர்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள கட்சிகள், சிவில் அமைப்புகள் இணைந்துள்ளமை சிறப்பான விடயம். அதேநேரம் வேட்பாளர் ஊடாக தமிழரசுக்கட்சியும் அந்தக் களத்துக்கு வந்துள்ளது.

ஏற்கனவே தாயகக் கோட்பாட்டின் அடிநாதமாக விளங்குகின்றதும், சமகாலத்தில் உச்சப்பட்ச சவால்கள் எதிர்நோக்கியுள்ளதுமான கிழக்கு மண்ணிலிருந்து மீன்பாடும் தேன் நாடு, தென் தாய்மண் மட்டக்களப்பிலிருந்து ஒருவர் முழுத் தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்வு செய்யப்பட்டமை பொதுக் கட்டமைப்பின் நடுநிலைப் பார்வையை உயர்த்தி உள்ளது. தமிழ்த்தேசியத் தேரை முன்நோக்கி இழுத்து, தமிழ்த் தேசியத் திரட்சியை வெளிக்காட்டுவதற்கும், தேக்க நிலையை உடைத்துப் புதிய அத்தியாயம் படைக்கவும் முன் வருவோம் - என்றுள்ளது. (அ-ம-66)

## நல்லூர்க்...

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் இருபத்தைந்து தினங்கள் மஹோற்சவப் பெருந் திருவிழா காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறும். எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் மஞ்சத் திருவிழாவும், 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை அருணகிரிநாதர் உற்சவமும், 26ஆம்திகதிதிங்கட்கிழமை மாலை 5 மணியளவில் கார்த்திகை உற்சவமும், 27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை சூர்யோற்சவமும், 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணியளவில் சந்தான கோபாலர் உற்சவமும், அன்றைய தினம் மாலை 5 மணியளவில் கைலாச வாகனத் திருவிழாவும், 29ஆம்திகதிவியாழக்கிழமை காலை 7 மணியளவில் கஜவல்லி மஹாவல்லி உற்சவமும், அன்றைய தினம் மாலை 5 மணியளவில் வேல் விமானம் (தங்கரதம்) உற்சவமும், 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் தண்டாயுதபாணி உற்சவமும், அன்றைய தினம் மாலை 5 மணியளவில் ஒருமுகத் திருவிழாவும், 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சப்பரத் திருவிழாவும், அடுத்த மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் தேர்த் திருவிழாவும், 2ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் மாலை கொடியிறக்க உற்சவமும், 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் பூங்காவனத் திருவிழாவும், மறுநாள் 4ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணியளவில் வைரவர் உற்சவமும் நடைபெறவுள்ளன.

(அ-ம-66-26)

## வடக்கு...

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் கூட்டணியானது ஒற்றுமையால் உருவாக்கப்பட்ட கூட்டணியாகும், அதனை உடைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பல முயற்சிகளை முன்னெடுத்துவருகின்றன. மதுபான சாலைகளைத் திறப்பதற்கான அனுமதிப் பத்திரங்களுக்காக மக்களைக் காட்டிக் கொடுக்கும் மக்கள் பிரதிநிதிகள் எமது பக்கம் இல்லை என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

செப்ரெம்பர் 21ஆம் திகதிக்குப் பிறகு நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். தகவல்துறையில் புதுப்புரட்சி ஏற்படுத்தப்படும், விவசாயம், மீன்பிடி, பெருந்தோட்டத்துறை, ஆடைக் கைத்தொழில் உட்பட தொழில் துறைகளைப் பலப்படுத்துவதற்கு எமது அரசு நடவடிக்கை எடுக்கும். தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களைப் கட்டியெழுப்புவதற்குரிய திட்டமும் உள்ளது.

வடக்கு - கிழக்கு மக்கள் படும் துன்பங்களில் இருந்து அவர்களை மீட்போம், மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு வழங்கப்படும். வாக்குகளுக்காக நாம் மக்களை ஒருபோதும் பயன்படுத்தப்போவதில்லை. அதேவேளை, குடும்ப ஆட்சிகாரணமாக எமது நாடு நாசமாகியுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணி குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்டும், முற்றுப்புள்ளி வைக்கும் - என்றார். (அ-ஒ-44)

## ஜனாதிபதித்...

ராஜபக்ச வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எஸ்.பி.திஸாநாயக்க மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் நாமல் போட்டியிடமாட்டார், அவர் போட்டியிடுவது மஹிந்த ராஜபக்சவுக்கும் நல்லதல்ல. சஜித் மற்றும் ரணிலுடன் பேரம்பேசி ஆதரவை வழங்குவதற்காகவே நாமல் வேட்பாளராகப் பெயரிடப்பட்டுள்ளார் என நினைக்கின்றேன். சிலவேளை நாமல் ராஜபக்ச போட்டியிட்டால்கூட அவருக்கு ஐந்தாவது இடம்தான் கிட்டும். முதல் இடம் ஜனாதிபதி ரணிலுக்கு, இரண்டாவது இடம் சஜித்துக்கு, மூன்றாவது இடம் அநுரவுக்கு கிடைக்கப்பெறும்" - என்றார். (அ-ம-44)

## வீடுகள்...

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 21 வயதுடையவர்கள், அவர்கள் உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தங்களின் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 3 மோட்டார் சைக்கிள்கள், இரண்டு வாள்கள், நான்கு பெற்றோல் குண்டுகள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26-20)

## தமிழ்ப்...

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறங்குவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான இதர நடவடிக்கைகள் மற்றும் வேட்பாளர் தெரிவு தொடர்பான கலந்துரையாடல்கள் தமிழ்ச் சிவில் சமூகமான தமிழ்மக்கள் பொதுச்சபைக்கும் தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதற்கான உடன்படிக்கை கடந்த மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டது. அத்துடன் தமிழ் மக்கள் பொதுச் சபையின் ஏழு பிரதிநிதிகளும், அரசியல் கட்சிகளின் ஏழு பிரதிநிதிகளும் ஒப்பமிட்டு 'தமிழ்த்தேசியப் பொதுக் கூட்டமைப்பை' உருவாக்கியிருந்தனர்.

எனினும், தமிழ்ப் பொதுவேட்பாளர் யார்? என்பதைத் தெரிவு செய்வதில் கடந்த பல நாட்களாகத் தொடர்ச்சியான இழுபறிநிலை நீடித்து வந்தது. இந்த நிலையில் தமிழ்த்தேசியப் பொதுக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந. சிறீகாந்தா தலைமையில் யாழ். நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் நேற்று வியாழக் கிழமை காலை ஒன்றுகூடிக் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட ஏகோபித்த தீர்மானத்துக்கமைய தமிழ்ப் பொதுவேட்பாளராக பா. அரியநேந்திரன் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

(அ-ம-26-20-66)

## கடும்...

வீசிய கடும் காற்றால் வீட்டின் கூரையொன்று தூக்கியெறியப்பட்டதையடுத்து, மூன்று குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன.

மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேர் அந்த வீட்டில் வசித்துவந்த நிலையில், இந்த அனர்த்தம் காரணமாக, அவர்கள் சுழிபுரம் திருவடிநிலை சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சங்கானை பிரதேச செயலர் தெரிவித்ததாவது:-

அசம்பாவிதம் இடம்பெற்ற வீட்டிலிருந்த குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. அவர்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக்கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125)

## அனைத்து...

வடமாகாண ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது. ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், வடமாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். வடமாகாணச் சுகாதாரத் துறையில் காணப்படும் சிக்கல்கள், மேற்கொள்ள வேண்டிய பொறிமுறை மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டன. இதன் போது, வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் அவசர சிகிச்சைப்பிரிவை அமைக்குமாறும், குறித்த பிரிவுக்கான ஆளணியை நியமித்து உரிய பயிற்சிகளை வழங்குமாறும் மாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

மருத்துவமனைகளை ஒருங்கிணைப்பதற்கான தரவுப் பொறிமுறை ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், சுகாதாரத் துறைக்குத் தேவையான ஆளணி, வளப்பற்றாக்குறை மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

(அ-ம-66-26)

## வடமாகாணத்தில்...

வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் விரிவுரையாளரும், வானியலாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தென்கரையோரத்தை அண்மித்த வங்காள விரிகுடாவில் நாளை சனிக்கிழமை நண்பகலுக்குப் பின்னர் வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இதனால், எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 17ஆம் திகதி சனிக்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்துடன், வடக்கு மாகாணத்துக்குத் தற்போது கிடைக்கும் மேற்காவுகை மழை எதிர்வரும் 11ஆம் திகதி வரை தொடரவும் வாய்ப்புள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-66)

## சந்தேகநபர்களின்...

சாட்டில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன மற்றும் அவரது மகன் ரவிந்து குணவர்த்தன உள்ளிட்ட ஆறு பேருக்கு உயர்நீதிமன்றத்தால் மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வாஸ் குணவர்த்தன மற்றும் ஏனைய பிரதிவாதிகள் தம்மை அந்தத் தண்டனைகளில் இருந்து விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்ததுடன், அவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையையும் உறுதிப்படுத்தியது. (அ-ச-இ)

## தமிழரசின்...

ஆனால், தமிழரசுக் கட்சியின் முடிவு இன்னமும் அறிவிக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை இது தொடர்பான முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன என்று தெரிய வருகின்றது. (அ-ம-66)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

# உக்ரைன் தாக்குதலால் ரஷ்யாவில் அவசரநிலை

**மொஸ்கோ, ஓக. 9**

**உக்ரைனின் ஊடுருவல் தாக்குதல்களையடுத்து, ரஷ்ய உயர்மட்டப் பாதுகாப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளுக்கு அமைய குர்க்ஸ் நகரில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.**



உக்ரைன் மற்றும் ரஷ்ய எல்லையில் அமைந்துள்ள குர்க்ஸ் நகரில் கடந்த இரண்டு நாள்களாக உக்ரைன் ஊடுருவல் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. சுமார் 1,000 இராணுவத்தினரைக் கொண்ட குழுவினர் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இந்த ஊடுருவல் தாக்குதல்களுக்காக வழிநடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலையிலேயே, ஊடுருவல்களை முறியடிக்கும் வகையில் குர்க்ஸ் நகரில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமை ஆலோசகர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குர்க்ஸ் நகரில் ரஷ்யாவின் மிகப்பெரிய அணுவுலைகளில் ஒன்று இயங்கி வருகின்றது. அந்த அணுவுலையைக் கைப்பற்றுவதற்கே உக்ரைன் இவ்வாறு தொடர்ச்சியான ஊடுருவல்களில் ஈடுபட்டு வருகின்றது. உக்ரைனிடமிருந்து ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ள ஜாபோரிஜியா அணுவுலையை மீட்பதற்காக குர்க்ஸ் நகர அணுவுலையைக் கைப்பற்ற முனைவது வரலாற்றுத் தவறு என்பதை உக்ரைன் மிக விரைவில் புரிந்துகொள்ளும். கனவிலும் மெய்ப்படாத காரியங்களுக்கு உக்ரைன் ஆசைப்படக்கூடாது என்று குர்க்ஸ் நகர முதல்வர் அலெக்ஸி ஸ்மிர்னோவ் தெரிவித்துள்ளார். (ம)



சுன்னாகம், மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் ஆடிப்பூர உற்சவம் விசேட அபிஷேகம், பூசையுடன் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. ஆடிப்பூரத்தை முன்னிட்டு சுன்னாகம் மகா காளி அம்மன் ஆலயத்திலிருந்து நாற்பதுக்கும் மேற்பட்ட ஆண், பெண் அடியவர்கள் ஆலயத்தை நோக்கிப் பாற்காவடிகளின் ஊர் வலமாகப் பவனி வந்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தனர். (சு-25,66)

# பங்களாதேஷின் இதயம் துடிப்பதற்கு குழப்பங்களை உடன் கைவிடுங்கள்!

## மாணவர்களை நேற்றுக் கோரியுள்ளார் இடைக்கால அரசின் தலைவர் யூனுஸ்

டாக்கா, ஓக. 9



பங்களாதேஷின் இதயம் தொடர்ந்து துடிக்க வேண்டுமாயின், குழப்பங்களையும், கலவரங்களையும் மாணவர்கள் கைவிட வேண்டும் என்று பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கத்தின் தலைவர் மொகமட் யூனுஸ் வலியுறுத்தியுள்ளார்.

மாணவர்கள் போராட்டங்களால் ஷேக் ஹசீனா பதவி விலகிய பின்னர், பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கம் நேற்று இரவு பொறுப்பேற்றுக் கொண்டது. இதன் பின்னர் ஊடகங்களிடம் உரையாற்றும் போதே, மாணவர்களைப் போராட்டங்களைக் கைவிடுமாறு மொகமட் யூனுஸ் கோரியுள்ளார்.

உங்களுக்கு என்மீது நம்பிக்கை இருந்தால், நாட்டில் எங்கும் தாக்குதல் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இதுவே எமக்கு முன்புள்ள முதல் பொறுப்பு. நாட்டை குழப்பத்தில் இருந்தும், வன்முறையில் இருந்தும் காப்பாற்றவேண்டும். இதன்மூலம் மாணவர்கள் காட்டிய 'உண்மையான பாதையில்' நாங்கள் முன்னேற முடியும் என்றும் யூனுஸ் வலியுறுத்தியுள்ளார்.

வங்கதேசம் ஓர் அழகான நாடு. இது அபரிமிதமான ஆற்றலைக் கொண்டுள்ளது. ஆனால், அது அழிந்துவிட்டது. இப்போது நாம் உழுது நிலத்தை தயார்செய்யவேண்டும். நாம் மீண்டும் எழ வேண்டும். இளைஞர்கள் உழுது நிலத்தை தயார் செய்வார்கள். நாங்கள் அதைப் பார்ப்போம். அவர்களின் வழிகாட்டுதலின்படி முன்னேறுவோம். இளைஞர்கள் மேற்கொண்ட பிரசாரம் பாராட்டுக்குரியது. இது பங்களாதேஷின் இரண்டாவது வெற்றிநாள். இந்த சுதந்திரத்தின் பலன்கள் பங்களாதேஷின் ஒவ்வொரு வீட்டையும் சென்றடையவேண்டும். அது நிகழாவிட்டால் இந்த இரண்டாவது வெற்றி அர்த்தமற்றதாகிவிடும் என்றும் மொகமட் யூனுஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## நிலநடுக்கம்

ஜப்பானில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜப்பானின் குய்ஷு மற்றும் ஷிகோகு தீவுகளுக்கு அருகாக ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.1 அளவாகப் பதிவானது. நேற்று இரவு வரை சுனாமி எச்சரிக்கை மீளப்பெறப்படவில்லை. (ம)

சடலத்துடன் பயணித்த

## வாகனம் மோதியதில் இளைஞன் காயம்!

சடலமொன்றை ஏற்றிச்சென்ற வாகனம் மோதியதையடுத்து, இளைஞர் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பருத்தித்துறை வீதியில், ஆவரங்கால் பகுதியில் நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. விபத்தையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட அச்சுவேலி பொலிஸார், சடலத்துடன் வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். பின்னர் வேறொரு வாகனத்தின் மூலம் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ம-23)

கோழி முட்டை மலிவு விலையில்
1 Kg இறைச்சி - 1000/=
முட்டை - 35/=
நியூ சிற்றி கோழிக் கடை
கோழி பாம்
குருநகர் மார்க்கட் முன்பாக
யாழ்ப்பாணம்.

வங்கி மீதி வசதி
(SHOW MONEY)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684

யாழ்ப்பாண சர்வதேச புத்தக திருவிழா - 2024
திகதி : ஆகஸ்ட் 9, 10, 11 இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
கல்வி உலகின் கலங்கரை விளக்கு பூபாலசிங்கம் புத்தகசாலையின்
மாபெரும் புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும்
பாடசாலைகள், மாணவர்கள், ஆசிரியர்கள், நூல் நிலையங்கள், நகரசபைகள், பிரதேச சபைகள், படைப்பாளிகள், புத்தக ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org